மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்
ஸ்ரீரங்கம்
OS.No.1042/2019

23.09.2024

PW–2 திரு. ராஜு த/பெ. கிருஷ்ணசாமி (வயது.57/2024)

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை–

1. வழக்கு பற்றிய விரங்கள் வாதியின் வழக்கறிஞர் என்னிடம் கூறினார் . வாதி தன் வழக்கறிஞரிடம் என்னை அழைத்து சென்றார் நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ளவிவரங்கள் என்னால் கொடுக்கப்பட்டது . நான் ஸ்ரீரங்கத்தில் 45 வருடமாக குடியிருந்து வருகிறேன் . தாவா சொத்து திருவளர்சோலை கிராமத்தில் உள்ளது ஸ்ரீரங்கதிலிருந்து திருவளர்சோலை சுமார் 7 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். திருவளர்சோலையில் நான் குத்தகை சாகுபடி செய்வதாக வாக்குமூலத்தில் சொல்லியுள்ள நிலம் ஒரு ஆறுமுகம் என்பவருக்கு சொந்தமானது ஆகும் . நான் குத்தகை சாகுபடி செய்வதாக சொல்லியுள்ள நிலங்களுக்கு வருவாய் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் குத்தகை சாகுபடி செய்வதாக சொல்லும் நிலத்தின் வருவாய் ஆவணங்களில் உரிமையாளர் பெயர் குறிப்பிடபட்டிருக்கும் என்றால் ச ரிதான். நான் குத்தகை செய்யும் நிலத்திற்கு உண்டான குத்தகை பதிவேட்டில் என் பெயரிலோ எனது தகப்பனார் பெயரிலோ ஏற்படவில்லை.

2. என்னிடம் ஆதார் அட்டை உள்ளது அதை தற்போது எடுத்துவரவில்லை வழக்கிலும் தாக்கல் செய்யவில்லை . தாவா வில் 1வது பிரதிவாதியாக காட்டப்பட்டுள்ள வின்சன்ட் என்பவரின் தகப்பனார் சவரி நாயகம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. தாவாவில் விவரரிக்கப்பட்டுள்ள சொத்து வாதி முத்துகிருஷ்ணனுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நான் குத்தகை செய்யம் நிலத்திற்கும் தாவா சொத்து நிலத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 200 அடி இருக்கும். வாதி முத்துகிருஷ்ணனை எனக்கு 20 வருடமாக தெரியும். தாவா சொத்து குத்தகை சாகுபடியில் உள்ளது தெரியுமா என்றால் தெரியும் . எத்தனை வருடமாக தாவா சொத்து குத்தகை சாகுடி செய்யபட்டு வருகிறது என்றவிவரம் எனக்கு தெரியாது . தாவா சொத்தை எந்த காலத்திலும் வாதி சொந்த சாகுபடி செய்யவில்லை என்றால் சமீபத்தில் அவர்தான் சாகுபடி செய்து வருகிறார்.

3. தாவா நிலம் குத்தகை பதிவேட்டில் 1வது பிரதிவாதி தகப்பனார் சவரிநாயகத்தின் பெயரில் பதிவாகியுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா நிலம் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் காலத்திலிருந்து குத்தகை சாகுடிதான் செய்யப்பட்டு வருகிறது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது சமீபத்தில் 10, 12 வருடமாக வாதிதான் சாகுபடி செய்து வருகிறார் . நான் தாவா சொத்திற்கு அருகில் உள்ள நிலத்தை குத்தகை சாகுபடி செய்வதான சொல்லிவிட்டு வழக்கின் அது சம்பந்தமான ஆவணங்கள் எதுவூம் தாக்கல் செய்யாததால் வாதி கேட்டுக்கொண்டதற்கினங்க வழக்கில் பொய்யான சங்கதிகள் கூறி வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து சம்பந்தமாக குத்தகை பதிவேட்டில் பிரதிவாதி பெயர்தான் உள்ளது என்பதால் அதனை மறுக்கும் பொருட்டு பொய்யாக வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

Sd/–xxx

Taken down by me in open court , read over
to his and accepted by him as correct and
made is his signature

Sd/–xxx

District Munsif – Cum - Judicial Magistrate,
Srirangam

Copy